**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

அசல் வழக்கு எண்.11/2024

The Oaths Act 1969, Act No.44/1969 விதிமுறைகளின்படி 01.09.2025**ம்** நாளாகிய இன்று திருமதி.P.ஸ்ரீதேவி.,எல்.எல்.எம்., அவர்களால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கருப்பையன் | தொழில் | : | |
| த/பெ.பெயர் | : | ஆறுமுகம் | கிராமம் | : | |
| வயது | : | | மாவட்டம் | : | |

பி.வா.சா:3

முதல் விசாரணை:–

நான் இந்த வழக்கின் 3ம் நபர். 4, 5 பிரதிவாதிகள் தரப்பு மூன்றாம் சாட்சி. நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, எதிர் வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என்னிடம் காட்டப்படும் 05.07.2002ம் தேதிய உயில் சாசனம் பி.வா.த.சாஆ.5ல் ஒன்றாவது சாட்சியாக உள்ளது எனது கையொப்பம். என்னிடம் காட்டப்படும் பி.வா.த.சாஆ.4ல் ஒன்றாவது சாட்சியாக உள்ளது எனது கையொப்பம்.

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்):–**

P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.09.01 18:05:36 +0200

**Copy of Deposition**

வாதி ஜோதிமணியின் அப்பா பெயர் என்ன என்றால் சாமியப்பன் ஆகும். நான் பங்காளி உறவுமுறையா என்றால் ஆமாம். பக்கத்து ஊர். மற்றொரு சாட்சி சாமியப்பனின் மைத்துனர். சண்முகம் இறக்கும் வரை சாட்சி வேலுச்சாமி, வாதியின் குடும்பத்தார் ஆகியோர் நேசமாகத்தான் இருந்தார்கள் என்றால் ஆமாம். தற்சமயம் போக்குவரத்து இல்லையா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உயில் சாசணம் எழுத வேண்டும் என்று சண்முகம் சொன்னாரா சாமியப்பன் சொன்னாரா என்றால் மாரப்பன் சொன்னார். எப்போது சொன்னார் என்றால் 05.07.2002ல் சொன்னார். 05.07.2002தான் நான் சாட்சி கையொப்பம் போட்ட தேதி என்றால் சரிதான். வாதியின் குடும்பத்தில் பஞ்சாயத்து எதுவும் நடத்தினார்களா என்றால் எப்போதும் நடக்கவில்லை. நான் இதுவரை எத்தனை சாட்சி கையொப்பம் போட்டிருப்பேன் என்றால் சுமாராக 10 பத்திரங்களில் சாட்சி கையொப்பம் செய்திருப்பேன். நான் படித்துள்ளேனா என்றால் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த 2 ஆவணங்களை தவிர வேறு எந்த ஆவணங்களில் யார், யாருக்காக என்ன தேதிகளில் சாட்சி கையொப்பம் செய்தேன் என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. இந்த 2 ஆவணங்களை கடைசியாக நான் எப்போது பார்த்தேன் என்றால் 4, 5 நாட்கள் கழித்து பதிவு செய்யும்போது பார்த்ததுதான். தற்போது வரை பார்க்கவில்லையா என்றால் பார்க்கவில்லை. என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் தேதி, விவரம் போட்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். யார் விவரங்கள் சொன்னார்கள் என்றால் 4ம் பிரதிவாதி நதியாவின் வழக்கறிஞர் மற்றும் நான் சொல்லி எழுதப்பட்டது. இந்த 2 ஆவணங்களும் யார் தயார் செய்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் ஹரிஹரன்



P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.09.01 18:05:44 +0200

என்கிற பத்திர எழுத்தர் தயார் செய்தார். நான் கையொப்பம் செய்த 20 பத்திரங்கள் யார் தயார் செய்தார்கள் என்ற விவரம் என்னால் சொல்ல முடியமா என்றால் சொல்ல முடியும். பத்திர எழுத்தர் பெயர் மட்டும் சொல்ல முடியும். குறிப்பிட்ட ஆவணத்தின் பத்திர எழுத்தர் பெயர் சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. எனக்கு என்ன தொழில் என்றால் விவசாயம். ஜோதிமணி காதல் மற்றும் கலப்பு திருமணம் செய்து கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஜோதிமணியின் கணவர் எங்கள் ஊரில் நொய்யல் ஆற்று பாலம் கட்டுவதற்கு மேலாளராக வேலை செய்த வகையில் ஜோதிமணியுடன் பழக்கம் ஏற்பட்டு திருமணம் செய்து கொண்டார் என்பது எனக்கு தெரியும். அவர்களுடைய திருமணத்திற்கு வாதிகள் வீட்டில் எதிர்ப்பு என்றால் சரிதான். வாதியின் கணவர் பெங்களூரை சேர்ந்தவர். தலைமறைவாகி பெங்களூர் சென்று திருமணம் செய்து செட்டில் ஆகிவிட்டார்கள் என்றால் சரிதான். 20.03.2002ம் தேதி அன்று வாதி திருமணம் செய்து கொண்டார், அந்த காலகட்டத்தில் வேளாளர் சமுதாயத்தில் காதல் திருமணம் என்பது மிகவும் குறைவு என்றால் சரிதான். கலப்பு திருமணத்தை கவுண்டர்கள் மத்தியில் அங்கீகரிக்கவில்லை என்றாலும், வீட்டிற்கு தெரியாமல் ஒரு பெண் கலப்பு திருமணம் செய்து கொண்டால் சொத்தில் இருந்து விடுதலை பத்திரம் எழுதி வாங்குவது வழக்கம் என்றால் சரிதான். வாதி ஜோதிமணியிடம் சொத்து பற்றி பேசினார்களா என்றால் இல்லை. மாரப்ப கவுண்டருக்கும், மலையம்மாளுக்கும் சட்டப்படியான சொத்துக்கு வாரிசு சாமியப்பன் மட்டும்தான் என்றால் சரிதான். பூர்வீக சொத்து என்பதால் அந்த தேதியில் சட்டப்படியான சொத்து உரிமை இருந்தது என்றால் சரிதான். வாதி திருமணம் செய்து



P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2025.09.01 18:05:56 +0200

கொண்ட விவரம் தெரிந்த பின் தேடி கண்டுபிடிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதா என்றால் இல்லை. மாரப்ப கவுண்டருக்கு அந்த ஆவணங்கள் எழுதிய தேதியில் 90 வயது இருக்குமா என்றால் 80 வயது இருக்கும். மலையம்மாள், மாரப்ப கவுண்டர் வயதை ஒத்தவர் என்றால் சரிதான். மாரப்ப கவுண்டருக்கு அப்போது 95 வயதிருக்கும் என்றால் சரியல்ல. 80 முதல் 85 வயதிருக்கும். மாரப்ப கவுண்டர், மலையம்மாள் இருவரும் படிப்பறிவு இல்லாதவர்கள் என்றால் சரிதான். 2 ஆவணங்களும் மகன் சாமியப்பன், பேரன் சண்முகம் ஆகியோர்கள் முன்னிலையில்தான் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். பத்திரம் எழுதுவதற்கும், பதிவு செய்வதற்கும் சாமியப்பன்தான் செலவு செய்தார் என்றால் இல்லை. மாரப்ப கவுண்டர் செலவு செய்தார். எவ்வளவு செலவு செய்தார் என்றால் தெரியாது. நான் அந்த உயில் சாசணங்கள் பி.வா.த.சா.ஆ.4 மற்றும் 5ல் கையொப்பம் செய்தது தவிர வேறு எங்கும் கையொப்பம் செய்யவில்லை என்றால் இல்லை. பதிவு அலுவலகத்தில் உள்ள ஆவணத்தில் கையொப்பம் செய்தேன். உயிலில் கையொப்பம் செய்யவில்லையா என்றால் இல்லை. உயில் தயார் செய்வதற்கு எவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டார்கள் என்றால் 2 மணிநேரம். இரண்டு உயிலுமா என்றால் ஆமாம். எந்த ஆவணங்களின் அடிப்படையில் அந்த உயில் சாசனம் எழுதப்பட்டது என்ற விவரம் சாமியப்பன், சண்முகத்திற்கு மட்டும்தான் தெரியுமா என்றால் மாரப்ப கவுண்டருக்கும் தெரியும். எனக்கும், மற்றொரு சாட்சி வேலுச்சாமிக்கும், மலையம்மாளுக்கும் அது பற்றிய விவரம் தெரியாது என்றால் சரிதான். உயில் சாசனம் எத்தனை ரூபாய் முத்திரை தாளில் தயாரிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உயில் சாசனம் கையால் எழுதப்பட்டதா, தட்டச்சு



P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2025.09.01 18:06:05 +0200

**Copy of Deposition**

செய்யப்பட்டதா, கணினியில் தயாரிக்கப்பட்டதா என்ற விவரங்களை என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. ஒவ்வொரு ஆவணத்திற்கும் எவ்வளவு ரூபாய் எழுத்துக்கூலி கொடுத்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தயார் செய்து வைத்திருந்த உயில் சாசனத்தில் என்னை சாட்சி கையொப்பம் போடச்சொன்னதால் நான் போட்டேனா என்றால் ஆமாம். உயில் சாசனம் எத்தனை பக்கங்களை கொண்டது என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் என்னால் சொல்ல முடியாது. ஒவ்வொரு பக்கத்திலும் மாரப்ப கவுண்டர் கைரேகை வைத்தாரா, கையொப்பம் செய்தாரா என்றால் கையொப்பம் செய்தார். மலையம்மாள் கையொப்பம் செய்தாரா என்றால் மலையம்மாள் ரேகை வைத்தார். ரேகைக்கு அருகில் கைநாட்டு என்று எழுதப்பட்டிருந்ததா என்றால் இல்லை. இடது கை பெருவிரல் ரேகை என்று பத்திர எழுத்தர் ஹரிஹரன் கைப்பட எழுதினார். கைரேகை வாங்கிய பின்னிட்டு எழுதினாரா என்றால் ஆமாம். கைரேகைக்கு இடது பக்கம் எழுதினாரா, வலது பக்கம் எழுதினாரா என்றால் என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. பத்திர எழுத்தர் அலுவலகத்தில் கருப்பு நிற மையினால் கைரேகை வைக்கப்பட்டதா என்றால் இல்லை. ஊதா வண்ணத்தில் ஸ்டாம்ப் பேடில் வைக்கப்பட்டது. மாரப்பன் என்பவர் மாரப்பன் என்று கையெழுத்து போடுவாரா, மாரப்ப கவுண்டர் அல்லது மாரப்ப கவுண்டன் என்று கையெழுத்து போடுவாரா என்றால் மாரப்பன் என்று போடுவார். ஏன் எழுதிய அன்றே பதிவு செய்யாமல் இரண்டு நாட்கள் கழித்து பதிவு செய்யப்பட்டது என்றால் தெரியாது. பதிவு கட்டணம் எவ்வளவு செலுத்தப்பட்டது என்றால் தெரியாது. என்னென்ன சொத்துக்கள், என்ன சர்வே எண்,



P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.09.01 18:06:11 +0200

**Copy of Deposition**

எவ்வளவு விஸ்தீரணம் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த ஆவணத்தை பார்த்து அந்த சொத்துக்கள் எழுதப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி திருமணம் செய்த பின்னிட்டு சண்முகம் ஒருவர்தான் வாரிசு என்னும்போது ஏன் உயில் சாசனம் எழுதுகிறீர்கள் என்று கேட்டேனா என்றால் இல்லை. உயில் எழுதிய 05.07.2002ம் தேதி என்ன கிழமை என்றால் ஞாபகம் இல்லை. அன்றைய தினம் அரசு விடுமுறை இருந்ததா, பதிவு அலுவலகம் இயங்கி வந்ததா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த 2 உயில் சாசணங்களிலும் வாசகம் ஒரே மாதிரி உள்ளதா வேறு மாதிரியாக உள்ளதா என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த 2 ஆவணங்களான பி.வா.த.சா.ஆ.4 மற்றும் 5 தவிர வேறு எந்த ஆவணத்திலும் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். உயில் சாசனம் வாதி கலப்பு திருமணம் செய்து கொண்டு ஊரை விட்டு சென்றுவிட்டதால் வாதிக்கு சொத்து கிடைக்கக்கூடாது என்ற ஒரே எண்ணத்தில் வாதியின் தந்தை சாமியப்பன், சகோதரன் சண்முகம், மாமா வேலுச்சாமி மற்றும் பங்காளிகள் ஆகிய நாங்கள் அனைவரும் ஒன்று கூடி திட்டமிட்டு மோசடியான ஆவணங்களை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி நதியா இந்த சொத்துக்களை அனுபவித்து வருகிறார் என்பது பொய் என்றாலும், அனைவரும் பொதுவில் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பி.வா.த.ஆ.4 மற்றும் 5 ஆவணங்கள் தயார் செய்த விவரம் எனக்கு தெரியாது என்றாலும், சாட்சி கையொப்பம் மட்டும்தான் நான் செய்துள்ளேன் என்றாலும், மேற்படி ஆவணங்கள் உண்மையான ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல.

P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.09.01 18:06:19 +0200

## Copy of Deposition

**2ம் பிரதிவாதி வாதியின் குறுக்கு விசாரணையை தனதாக ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை:- இல்லை**

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.09.01 18:06:26 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |